**கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியம் - 2025**

---------------------------------------------------------------------------------- -

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பராயம்

கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவுக் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க மற்றும் 1988 இன் 64 ஆம் இலக்கம் மற்றும் 2011 இன் 49 ஆம் இலக்கச் சட்டங்களால் திருத்தப்பட்ட 1981 இன் 57 ஆம் இலக்கக் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவச் சட்டத்தின் 31 (ஊ) (2) பிரிவுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தவிர, 2025 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மீது என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகவுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியத்தின் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அட்டுறு அடிப்படையில் கணக்குகளைப் பராமரிக்கும் போது, ஒரு ஆண்டுக்குரிய அனைத்து வருமானங்கள் மற்றும் செலவுகளும் அடையாளம் காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் இனங்காட்டப்பட வேண்டும் எனினும், நிதியத்தின் வருமான மற்றும் செலவுக் கூற்றில் மீளாய்வாண்டுடன் தொடர்புடையதாகக் கணக்கில் | நீதி அமைச்சினால் அனைத்து நீதிவான் நீதிமன்றங்களுக்கும், தொடர்புடைய தண்டப் பணத்தை இத்துறைக்கு அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் அதிகாரிகளுக்குரிய வெகுமதிப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக | நிதியத்துடன் தொடர்புடைய அனைத்து வருமானங்கள் மற்றும் செலவுகள் காலத்திற்கேற்பவும் முழுமையாகவும் இனங்காணப்பட்டு அறிக்கைப்படுத்தப்படுவதற்காக முறையான கணக்கீட்டு மற்றும் அறிக்கைப்படுத்தல் முறையொன்று நிறுவப்படுதல் வேண்டுமென்பதுடன், |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டுள்ள ரூபா 5,675,549 வருமானமும் ரூபா 5,519,212 செலவும், நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய தகவல்களின் அடிப்படையில் மாத்திரமே கணக்கில் காட்டப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டுடன் தொடர்புடைய மொத்த வருமானம் மற்றும் செலவு வெளிப்படுத்தப்படாமை தொடர்பில் நிதிக்கூற்றுக்கள் மூலம் எந்தவொரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட வேண்டிய விண்ணப்பப் படிவமும் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தொடர்புடைய பணத்தை பெற்றுக்கொள்வதற்கும் செலுத்துவதற்கும் ஒரு பொறிமுறை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், தொடர்புபட்ட நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உரிய முறையில் பணத்தை அனுப்பாமை மற்றும் வெகுமதியினைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்காமை காரணமாக, வெகுமதிப் பணத்தைச் செலுத்த இயலாமை ஏற்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன். | நிதிக்கூற்றுக்களின் முழுமையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 264 | ஆரம்பத்திலிருந்தே வெகுமதிப் பணம் வழங்கப்பட்ட எந்தவொரு அதிகாரியிடமிருந்தும், அப்பணம் கிடைக்கப்பெற்றமைக்கான உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளும் பொறிமுறையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | வெகுமதிகளை வழங்குவதில், அதிகாரிகள் எமக்கு அனுப்பிவைக்கும் தகவல்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன், தொடர்புடைய பொலிஸ் நிலையங்களுக்குப் பணம் கிடைக்கப்பெற்றதா என்பது குறித்த உறுதிப்படுத்தல் ஆவணத்தை அனுப்பி வைக்குமாறு நிறுவனத்தினால் | வெகுமதிப் பணக் கொடுப்பனவுகளுக்காகப் பயனாளிகளின் கையொப்பத்துடன் கூடிய பற்றுச்சீட்டு உறுதிப்படுத்தல்கள் அல்லது வேறு முறையான உறுதிப்படுத்தல் பொறிமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், இதுவரை அதற்காக எவரும் பதிலளிக்கவில்லை. இது குறித்து மீண்டும் அதிகாரிகளுக்கு அறிவித்துத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 395(இ) | நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய 2025 ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலப்பகுதிக்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கு பதில் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க, மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, வேறுபாடுகள் உடனடியாக அடையாளம் காணப்பட்டுத் சீராக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 156,337 மிகையினைக் கொண்டிருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டில் மிகையோ அல்லது பற்றாக்குறையோ இருக்கவில்லை. நிர்வாக நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணம் செலவிடப்படாமல் இருந்தமை மீளாய்வாண்டில் மிகை ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2017 மே 09 ஆம் திகதிய 2018/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் (4) ஆம் இலக்க பந்தியின் பிரகாரம், நீதிமன்றக் கட்டளைகளின் மூலம் கிடைக்கப்பெறும் தண்டப் பணத்திலிருந்து வெகுமதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 50 சதவீதப் பணமானது வெகுமதிகளுக்காக தகுதிபெற்ற நபர்களுக்குக் | 1981 இன் 57 ஆம் இலக்கக் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவச் சட்டத்தின்படி, பொலிஸாரால் அனுமதியற்ற அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றது. எனவே, ஒவ்வொரு மாத முடிவிலும் தாங்கள் தாக்கல் செய்த வழக்குகளுக்குரிய வெகுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்காகச் தொடர்புடைய விண்ணப்பப் படிவத்தை அனுப்புமாறு | தகைமைபெற்ற பயனாளிகளை உடனடியாக அடையாளம் கண்டு நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க வெகுமதிப் பணத்தைச் செலுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை வெகுமதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,165,405 உம், 2025 ஆம் ஆண்டிற்குரியதாக ரூபா 1,585,275 உம் தொடர்புடைய நபர்களை இனங்கண்டு செலுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று வெகுமதியாக நபர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய மொத்த மீதியானது ரூபா 2,750,680 ஆகும். இதனால், வெகுமதி நிதியத்தைப் பராமரித்துச் செல்லும் நோக்கங்கள் முறையே நிறைவேற்றப்படுகின்றனவா என்பது சந்தேகத்திற்குரியதாக காணப்பட்டது. | பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தொடர்புடைய நீதிவான் நீதிமன்றங்களுக்குச் தொடர்புடைய தண்டப் பணம் இந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தொடர்புடைய தண்டப் பணம் உரிய முறையில் அனுப்பப்படுவதிலும், வழக்குத் தாக்கல் செய்த பொலிஸாரால் உரிய தகவல்கள் வழங்கப்படுவதிலும் வெகுமதிப் பணம் செலுத்துதல் இடம்பெறுகிறது. அதற்கமைய, நோக்கம் உரிய முறையில் நிறைவேற்றப்படுவதுடன், தொடர்புடைய பெயர்ப்பட்டியல்களைப் பொலிஸார் அனுப்பி வைக்காதபோது வெகுமதிகளுக்கான பணம் இருந்தாலும்கூட செலுத்துவதற்கான இயலாமை ஏற்படுகின்றது. | |
| (ஆ) | கடற்கரையோரத்தில் அனுமதியற்ற அபிவிருத்திச் செயற்பாடுகளைக் குறைப்பதற்காகப் பொலிஸ் அதிகாரிகளும் அரசாங்கத்தின் ஏனைய அதிகாரிகளும் தலையிட்டுச் செயற்படுவதன் மூலம் நீதிமன்றத்தில் சேரும் தண்டப் பணத்தை தொடர்புடைய அதிகாரிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக, அப்பணத்தைக் கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியத்திற்குத் திரட்டிக்கொள்ளக்கூடிய வகையிலும், தொடர்புடைய தரப்பினருக்கு உடனடியாகப் பகிர்ந்தளிக்கக்கூடிய வகையிலும் நாட்டின் நீதிமன்ற அமைப்பு, பொலிஸ் நிலையங்கள் மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம் ஆகியவற்றுக்கிடையே | நீதி அமைச்சினால் அனைத்து நீதிவான் நீதிமன்றங்களுக்கும் தொடர்புடைய தண்டப் பணத்தை இத்துறைக்கு அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், தொடர்புடைய தண்டப் பணம் இத்துறைக்கு செலவு வைக்கப்பட வேண்டுமென்பதும் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவச் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பொலிஸ் அதிகாரிகளுக்குரிய வெகுமதிப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பப்பட வேண்டிய விண்ணப்பப் படிவமும் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தொடர்புடைய பணத்தை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் செலுத்துவதற்கு ஒரு பொறிமுறை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய | தகவல் பரிமாற்றம், தண்டப் பணம் சேகரிப்பு மற்றும் வெகுமதிக் கொடுப்பனவுகள் தொடர்பில் நிறுவனங்களுக்கு இடையே முறையான ஒருங்கிணைப்பு மற்றும் அறிக்கைப்படுத்தல் பொறிமுறை ஒன்று நிறுவப்பட வேண்டும். |

| | |
|---|---|
| முறையான பொறிமுறையொன்று நடைமுறையில் இருக்கவில்லை. நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவற்றைப் புதுப்பிப்பதற்கும் நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு திருப்திகரமாக காணப்படவில்லை | நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உரிய முறையில் பணத்தை அனுப்பாமையும் வெகுமதியைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்காமையும் காரணமாக, வெகுமதிப் பணத்தைச் செலுத்த இயலாமை ஏற்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 இலக்கப் அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877 (2) (உ) இன் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் நிறைவடைவதற்கு முன்னர் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும், ஆரம்பத்திலிருந்தே அந்த அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | முன்னைய ஆண்டுகளில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாதிருந்ததுடன், 2024 ஆம் ஆண்டு முதல் அது மேற்கொள்ளப்பட்டது. எனவே, எதிர்காலத்தில் வருடாந்த செயலாற்றல் அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | சுற்றறிக்கைக்கு இணங்க, வருடாந்த செயலாற்றல் அறிக்கை உரிய காலப்பகுதியினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |